# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.07.31 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)

**1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டத்தினை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 29.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

ச. வ.- ஒ 30/2025

**1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டத்தினை நீக்குவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினை நீக்குதல்

**2.** (இதனகத்துப்பின்னர் “நீக்கப்பட்ட சட்டம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1986 ஆண்டின் 4 ஆம் இலக்க, சனாதிபதிகளின் உரித்துரிமைகள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

ஐயத்தை தவிர்தல்

**3.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்து-

(அ) நீக்கப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் சனாதிபதிக்கு அல்லது முன்னாள் சனாதிபதி யின் கைம்பெண்ணுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடம் அல்லது செலுத்தப்பட்ட மாதாந்த படி;

(ஆ) நீக்கப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் சனாதிபதிக்கு அல்லது முன்னாள் சனாதிபதி யின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த செயலகப் படித்தொகை, வழங்கப் பட்ட அலுவலக போக்குவரத்து மற்றும் அத்தகைய வேறு வசதிகள்; அத்துடன்

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் சனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப் பட்ட மாதாந்த ஓய்வூதியம்,

என்பன இச்சட்டம் தொடங்கும் தேதியன்றும் அதன் பின்னரும் இனிமேல் வழங்கப்படுதலாகாது அல்லது செலுத் தப்படுதலாகாது என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் த்ணைக்களத்தில் பத்ப்பிக்கப்பெற்றது